# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 157/10 — 1975 අප්‍රේල් 02 වැනි බදාදා — 1975.04.02

157/10 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வருமான உச்சவரம்பு*
*கட்டாய சேமிப்புப் பற்றிய சட்டம்*

*47 (1) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வருமான உச்சவரம்பும், கட்டாய சேமிப்பும் பற்றிய சட்டத்தின் 47(1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் நாணயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம், கட்டாய சேமிப்பு நிதிக்கு உதவுதொகைகள் செலுத்தத் தேவைப்படுத்தப்பட்டுள்ள எவரும்;*

*(அ) 1974 ஏப்பிரல் 1 ஆந் தேதியில் அல்லது அதன் பின் ஆரம்பமாகும் எந்தவொரு மதிப்பீட்டாண்டிற்கும்—*

*(i) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஆணையாளர் அதிபதியினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் சேமலாப அல்லது ஓய்வூதிய நிதிக்கு உதவுதொகையை அல்லது,*

*(ii) தொழில் தருநரால் வழங்கப்பட்ட வாகனத்தின் பெறுமதியாக தனது தொழில் தருநருக்கு மீளநிரப்பலாக ஏதேனும் தொகையைச்*

*செலுத்தி இருந்தால் அல்லது*

*(ஆ) 1974 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆந் தேதியில் அல்லது அதன் பின் ஆரம்பமாகும் எந்தவொரு மதிப்பீட்டாண்டிற்கும் அத்தகைய ஆள் ஒருவரின் இலாபங்களும் வருமானமும்—*

*(i) தொழில் தருநரால் வாடகையின்றி வழங்கப்பட்ட வதிவிடம் எவற்றினதும் வாடகைப் பெறுமதியை ; அல்லது*

*(ii) தொழில் தருநரால் இலவசமாக வழங்கப்பட்ட வாகனப் பெறுமதியை*

*உள்ளடக்கியதாக ஆணையாளர் அதிபதி திருப்தியடையும் வண்ணம் அத்தகைய ஆள் எண்பித்தால் ஆணையாளர் அதிபதி நிவாரணம் வழங்கலாம் என்று வெளிப்படுத்துகின்றேன்.*

*என். எம். பெரேரா,*
*நிதி அமைச்சர்.*

*கொழும்பு,*
*1975.3.31.*

*4-228/1*

---

*எல். டி.—பி 25/72*

*1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வருமான உச்சவரம்பும்*
*கட்டாய சேமிப்பும் பற்றிய சட்டம்*

*1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாய சேமிப்பும் பற்றிய சட்டத்தின் 9(6)(ஆ) என்னும் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.*

*என். எம். பெரேரா,*
*நிதி அமைச்சர்.*

*கொழும்பு,*
*1975.3.31.*

### கட்டளை

*1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க வருமான உச்சவரம்பும் கட்டாய சேமிப்பும் பற்றிய சட்டத்தின் 9(6) (ஆ) என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 39/7 ஆம் இலக்க 1972 டிசெம்பர் 29 ஆந் தேதிய அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்டு 65/2 ஆம் இலக்க 1973 யூன் 23 ஆந் தேதிய அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்ட கட்டளை அதன் அட்டவணையின் பந்தி 6, அவ்வட்டவணையின் பந்தி 6 இற்கான முதலாவது காப்புரையை நீக்குவதன் மூலம், மேலும் இத்தால் திருத்தப் படுகின்றது.*

*4-228/2*

---

*எல்.டி.—பி. 1/75*

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டம்

### 57 ஆம் பிரிவின்கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சர், மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய யான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைக்கு, நீர்வழங்கள் வடிகால் சேவைத் திணைக்களத் தினால் அல்லது அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்டதும், அல்லது அத்திணைக்களம் ஒரு திறந்தவராகவுள்ளதும், 1975 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளன்றுள்ளதுமான எல்லா ஒப்பந்தங்களிலிருந்தும், உடன்படிக்கைகளிலிருந்தும், வேறு சாதனங்களிலிருந்தும் எழுகின்ற அத்திணைக்களத்தின் பொறுப்புமுயற்சி தொடர்பான அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட எல்லா உரிமைகளையும், கட்டுப்பாடுகளையும், பொறுப்புக்களையும், இக்கட்டளைமூலம் கைமாற்றுகின்றேன்.*

*மைத்திரிபால சேனநாயக்க,*
*நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சர்.*

*கொழும்பு, 1975 ம் ஆண்டு எப்பிறில் மாதம் 1 ம் திகதி.*

*4-227*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.